**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# சங்க இலக்கியத்தில் முல்லைநில மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகள்

**செ. முத்தமிழ்ச்செல்வி,** (பதிவு எண் : R20162960)
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

**முனைவர் மு. இராஜலெட்சுமி**
ஆய்வு நெறியாளர், உதவிப்பேராசிரியர்,தமிழ் உயராய்வு மையம்
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்துப்பேட்டை
இராமநாதபுரம் மாவட்டம் - 623 523
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககால முல்லை நில மக்கள் தங்கள் வாழ்வியல் விழுமியங்;களாகப் பலவற்றைக் கடைபிடித்து வந்துள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தகுந்த ஒன்று நம்பிக்கையாகும். தம்மைச் சுற்றி நிகழும் இயல்பான செயல்களிலிருந்து தமக்கு நன்மையோ அல்லது தீமையோ நிகழப்போவதாக மக்கள் நம்பினர். இதனையே நம்பிக்கை என அழைத்துள்ளனர். இந்நம்பிக்கை குறித்த சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்களின் பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. அவற்றுள் ஆயர்கள் குழலோசை கேட்பதை மாலை சூட்டி மணந்த கணவன் உடனே வரவிருக்கும் நன்னிமித்தமாகக் கொண்டிருந்தனர் என அறியமுடிகிறது. போருக்காகவும், பொருளுக்காகவும் பிரிந்து சென்ற தலைவன் திரும்ப வரும்பொருட்டு விரிச்சி கேட்கும் நம்பிக்கையானதும், காக்கை கரைதல் என்பது விருந்தினர்கள் தம் இல்லத்திற்கு வருவர் எனும் நம்பிக்கையானதும் முல்லை நில மக்களிடம் இருந்துள்ளதை அறியமுடிகிறது. பல்லி ஒலியெழுப்புதல் மூலம் பிரிந்து சென்ற தலைவன் விரைவில் மீண்டு வருவான் என நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது. மகளிரின் இடக்கண் துடித்தலை நன்னிமித்தமாகவும், வலக்கண் துடித்தலை தீ நிமித்தமாகவும் சங்ககால முல்லை நில மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என அறியமுடிகிறது. திங்களைப் பாம்பு கொள்ளும் எனவும், மரங்களில் தெய்வங்கள் உறையும் எனவும் முல்லை நில ஆயர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதும் முல்லைத்திணைப் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

**முதன்மைச் சொற்கள்**

முல்லைநில மக்கள், நம்பிக்கை, நற்சொல், காக்கை கரைதல், பல்லி ஒலியெழுப்புதல்

**முன்னுரை**

பழந்தமிழர்களின் வாழ்க்கையானது நில அமைப்பைச் சார்ந்தும் இயற்கைச் சூழலைச் சார்ந்தும் அமைந்துள்ளது. இவ்வாறு அமைந்த மக்களின் வாழ்க்கை

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

யில் அவர்களால் பரிமாற்றம் செய்யப் படும் நம்பிக்கைகளும் அவர்களோடு ஒன்றிய தன்மையில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. ஒரு சமுதாயத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையினையே பண்பாடு என்பர். பண்பாட்டினையும் நாகரித்தினையும் ஒருங்கே புலப்படுத்தும் நிலையினவாக அமையும் நம்பிக்கைகள் சமுதாயத்தின் தனித்த நிலையினை அறிவதற்கு உதவும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழர்களின் நம்பிக்கை களும் ஆராயப்படுகின்றன. முல்லை நில மக்களாகிய ஆயர்கள் சங்ககாலத்தில் தங்களுக்கென்று தனித்த நம்பிக்கை களைக் கொண்டிருந்தனர். அவற்றுள் சில அறிவியல் வழிப்பட்டவையாகவும் தமிழ்ப்பண்பாட்டிற்கு உகந்தவையாகவும் உள்ளன. சங்ககாலத்தில் ஆயர்இனத்தவர் களுக்கு உரித்தானதாக இருந்த இந்நம்பிக்கைகளும் இவை தமிழகத்தில் அனைத்து இனமக்களுக்கும் உரியனவாகத் திகழ்கின்றன. முல்லைத்திணைப் பாடல் கள் வழிநின்று முல்லைநில மக்களின் நம்பிக்கைகளை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நம்பிக்கைகள்**

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பின்பற்றப்படுவன. அவை சமூகத் தேவைகள் மற்றும் குறிக்கோள் களின் அடிப்படையில் தோன்றியன. மனிதனின் உணர்வுகளும், சமுதாய உணர்வுகளுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. அவை காலங்காலமாகத் தொடர்ந்து மரபு வழியே தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்படுகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காட்சி தருகின்றன.

அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின் தோற்றத்தினையும் இயற்கையின் செயற்பாடுகளையும் தனது வாழ்வியல் நட்புகளோடு இயைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன. அத்துடன் நன்மை விளைய வேண்டுமென்ற மனிதனின் விருப்பமும் இணைந்து கொண்ட நிலை யில் நம்பிக்கையின் எல்லையும் விரிந்தது. இந்த நம்பிக்கைகள் மனித சமுதாயத்தில் காலங்காலமாக நிலை கொள்வதற்கு மரபும் முக்கிய காரணமாகும். "தீமைக ளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயலும் தற்காப்பு முயற்சியும், நன்மையே விளைய வேண்டுமென்ற விருப்பமாகவும் நம்பிக்கைகளை நிலைநிறுத்துகின்றன. மனிதனின் நல உணர்வு காரணகாரியத் தைக் காண முனைவதில்லை. ஆதலால் நம்பிக்கைகளை மனிதமனம் ஏற்றுக் கொள்கிறது. பொதுவாக நம்பிக்கைகளை உள உருவாக்கம் என்பர்" (க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கை களும், ப.107) என நம்பிக்கை குறித்துக் க.காந்தி குறிப்பிடுகிறார்.

மக்கள் தங்களது செயலில் வெற்றி கிடைத்தால் நன்மையாகவும் தோல்வி ஏற்பட்டால் தீமையாகவும் கருதி நிமித்த ங்களையும் நிமித்தக் கூறுகளையும் கற்பித்து நம்பிக்கைகளை உருவாக்கிக் கொள்கின்றனர். நம்பிக்கைகள், மக்களால் உருவாக்கப்படுவன. அவை வழக்கில் மிகுதியாகவும், இலக்கியங்களில் குறைந் தும் காணப்படுகின்றன. எனவே, இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள் அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள் அனைத் தையும் வெளிப்படுத்தும் என்று சொல்ல இயலாது. இலக்கியங்கள் இடம் பெறும் நம்பிக்கைகள் பெரும்பாலும் அன்றைய மக்களிடையே சமுதாயச் செல்வாக்குப் பெற்ற குறிப்பிடத்தக்க நம்பிக்கைகளாக மட்டும் அமையும்.

"நம்பிக்கைகள் மரபு வழியில் காலங் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கும் பரவி வருகின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பலநம்பிக்கைகளை மக்கள் கொண்டிருக்கின்றனர். நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறும்அளவிற்கு அவை வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன.ஒரு வளர்ச்சியடைந்த மனிதனிடம் பத்தாயிரக்கணக்கான நம்பிக்கைகளும் நூற்றுக்கணக்கான வழக்கங்களும் எண்ணிக்கைக்குட்பட்ட சில குறிக்கோள்களும் இருப்பதாகச் சமூக அறிவியல் கலைக்களஞ்சியம்

குறிப்பிடுகின்றது" (க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.105) என க.காந்தி நம்பிக்கை குறித்து விளக்கியிருப்பதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியத்தில் நம்பு என்ற சொல் விருப்பம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளதை,

**"நம்பு மேவு நசையா கும்மே"**
(தொல்.சொல்.நூ.329)

என்ற நூற்பாவால் அறியமுடிகிறது. இங்கு உரிச்சொல் அடியாகப் பிறந்த எச்சமாகக் காட்டப்படுகின்றது. நற்றிணையில் நம்பு என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளில் கையாளப் பட்டிருக்கின்றதை,

**"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்**
**சுடுவான் போல நோக்கும்"** (நற்.175:7-8)

என வரும் பாடலடிகள் சுட்டுகின்றன. மற்றொரு பாடலில் நம்புதல் என்ற சொல்லாட்சியும் பயின்று வந்துள்ளதை,

**நாடல் சான்றோர் நம்புதல் பழியெனிற்**
**பாடில கலுழுங் கண்ணொடு சாஅய்ச்**
**சாதலு மினிதே காதலந் தோழி**
(நற்.327:1-3)

என்ற பாடலடிகள் சான்று பகர்கின்றது. இவற்றிலிருந்து நம்பு என்ற சொல் தொடக்கத்தில் விருப்பம் என்ற பொருளிலும் பின்னர் நம்பிக்கை என்ற பொருளிலும் கையாளப்பெற்றுள்ளதாகக் கருதலாம். காலப்போக்கில் இச்சொல் நம்பிக்கையை மட்டும் குறிப்பதற்குப் பயன்பட்டு வந்துள்ளதனை காண முடிகின்றது.

தமிழரின் நம்பிக்கைகள் பரந்துபட்டவை. அவை காலங்காலமாக மக்களிடையே வழக்கில் பயின்று வந்திருப்பவை. தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் நம்பிக்கைகளை விடத் தமிழ் சமூகத்தில் தனிமனித வாழ்வில் நிலவும் நம்பிக்கைகள் பலதரப்பட்டவை. பல்லாயிரக்கணக்கானவை. எனவே இலக்கியங்கள் குறித்துச் சொல்லும் நம்பிக்கைகளைக் கடந்த கால நிகழ்காலச் சான்றுகள் கொண்டு சமூக, மானுட உளவியல் அணுகுமுறைகளின் வழிக்காண்பது பயனுடையதாக அமையும். முல்லைத் திணைப் பாடல்களில் காணப்பெறுகின்ற பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள் பற்றி பின்வருமாறு காணலாம்.

### முல்லை நில மக்களின் நம்பிக்கைகள்

சங்ககால முல்லை நில மக்களிடம் விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல் முதலான நம்பிக்கைகள் காணப்பட்டன. அந்நம்பிக்கைகள் இன்றுவரை தமிழக மக்களிடம் இனப்பாகுபாடின்றி தொடர்ந்து வருவதையும் காண முடிகின்றது.

### ஆயர்தம் குழலோசை

முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர்கள் குழலோசை கேட்பதை நன்னிமித்தமாகக் கருதியுள்ளார்கள். ஆயர் ஊதும் குழலோசையின்கண் தோன்றும் பண்ணோசை, மாலை சூட்டி மணந்து கொண்ட கணவனை உடனே வருவிக்கும் நன்னிமித்தமாக ஆயர்குலப் பெண்களால் கருதப்பட்டமையை,

**அணிமாலைக் கேள்வன் தரூஉமார் ஆயன்**
**மணிமாலை ஊதும் குழல்** (கலி.101:34-35)

என்ற முல்லைக்கலிப் பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

### விரிச்சல் கேட்டல்

விரிச்சி கேட்கும் பழக்கம் சங்ககால மக்களிடம் இருந்ததை,

**"வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு**
**ஈண்டிருள் மாலைச் செல்லலோர்த் தன்று"** (புறப்பொருள் வெண்பாமாலை, நூ.3) என்று விரிச்சி குறித்து புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. முல்லை நிலப் பெண்கள் தங்களின் துன்பநிலை நீங்குவதற்காக விரிச்சி கேட்டனர். விரிச்சி என்பது நற்சொல்லை குறிக்கும். மனையிலுள்ள பெருமுது பெண்டிரே விரிச்சி கேட்பவராக அமைகின்றனர். ஊரின் ஒரு இடத்தே சென்று விரிச்சி கேட்டாலும் தன்மனையிலேயே மணலைப் பரப்பி விரிச்சி கேட்டலே பெருவழக்காகக் காணப்படுகிறது. மணி ஒலிக்க நாழியில் நெல்லுடன் சென்று அந்நெல்லையும் முல்லைப் பூவையும் நீருடன் சொரிந்து விரிச்சியை நோக்கி நிற்பார்கள். அப்பொழுது அவர்கள்

காதில் விழுகின்ற சொற்களைக் கொண்டு தமக்கு நேரும் நன்மை தீமைகளை உணர்ந்து கொள்வார்கள்.

“பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலை

அருங்கடி மூதூர் மருங்கில் போகி

யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு

நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பு அவிழ்அலரி தூஉய் கைதொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப”

(முல்லைபா. 6-11)

எனவரும் வரிகள் பெண்கள் கோவில் சென்று முல்லை மலர்களைத் தூவி நற்சொல் கேட்பதைக் குறிப்பிடுகின்றன. மேலும்,

“பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்

திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப”

(நற்.40:3-4)

எனவரும் நற்றிணைப் பாடலடிகள், தேரில் பூட்டியமணிகள் ஒலி செய்யுமாறு தலைவன் விரைவில் வந்து தமது இல்லத்தைச் காவல் செய்ய வேண்டு மென, ஒருபக்கம் நின்று முதுபெண்டிர் விரிச்சி கேட்பதைக் குறிப்பிடுகின்றன. நெல்லையும் நீரையும் தூவி முதிய பெண்கள் விரிச்சி கேட்பதை,

அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்

நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்

செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா

(புறம்.280:5-7)

என்னும் பாடல்கள் மூலம் முல்லை நில மக்களின் விரிச்சிகேட்கும் நம்பிக்கைக்குச் சான்றளிக்கின்றன. இக்காலத்திலும் நற்சொல் கேட்டல் நல்ல சகுனமாகக் கருதப்படுகிறது.

### காக்கை கரைதல்

காக்கை கரைதல் விருந்தினர்களின் வருகைக்கான அறிகுறியாகும் என்னும் நம்பிக்கை சங்ககாலத்தில் முல்லை நில மக்களிடம் காணப்பட்டது. அந்நம்பிக்கை சங்ககாலம் முதற்கொண்டு இக்காலம் வரையில் தமிழக மக்களிடம் நிலவி வருவதைக் காணமுடிகின்றது. குறுந்தொகையின் முல்லைத் திணைப் பாடலில் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடியபாடல் இதற்குச் சான்றாகின்றது. முல்லை நில ஆயர் மகளிர் காக்கை கரைதலைத் தன்னைப் பிரிந்து சென்ற தலைவனின் வருகையை அறிவிக்கும் நம்பிக்கையாகக் கொண்டு மகிழ்ச்சியுடன் காக்கைக்கு விருந்துணவு அளித்துள்ளனர்.

இதனை,

எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி

பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே

(குறுந்.210:4-6)

என்ற குறுந்தொகைப் பாடலால் அறிய முடிகிறது.

காக்கையின் இச்சிறப்பைப் பாடியதனா லேயே நச்செள்ளையார் என்ற சங்கப் புலவர் காக்கைப்பாடினியார் என்னும் சிறப்பு அடைமொழியையும் பெற்றுள் ளார். காக்கை கரையும் போது புதிய காக்கைகள் அங்கு வந்து கூட்டமாகக் கூடும். அதைப் போலவே தங்கள் இல்லங்களுக்கும் புதிய விருந்தினர்கள் வந்து கூடுவர் என முல்லை நில ஆயர்கள் அக்காலத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

தோள்வலி யாப்ப ஈண்டுநம் வரவினைப்

புள்அறி வுறீஇயின கொல்லோ, தெள்ளிதின்

காதல் கெழுமிய நலத்தள் ஏதில்

புதல்வற் காட்டிப் பொய்க்கும்

திதலை அல்குல் தேம்மொழி யாட்கே!

(நற்.161:8-12)

தலைவன் வினைமுடித்து மீளும் போது தேர்ப்பாகன் விரைந்து தேரைச் செலுத்து கின்றான். அதனால் மகிழ்ச்சியடைந்த தலைவன் தன் வரவைத் தலைவிக்குக் காக்கைப்புட்கள் முன்னரே சென்று அறிவித்திருந்தால் தன் மனைவி மகிழ்ந்து இன்புற்றிருப்பாள் என்கின்றான். தலை வனது வருகையை முன்னரே காக்கையின் நிமித்தங்களால் அறிந்து கொண்ட மனைவி தானும் அதனை உளங்கொண்டு மகிழ்ந்து தன் புதல்வனையும் தேற்றி மகிழ்விகின்

றாள் என்பதை அறிய முடிகிறது.

### பல்லி ஒலியெழுப்புதல்

பல்லி ஒலியெழுப்புவதையும் சங்ககால முல்லைநில மக்கள் நம்பிக்கையாகக் கொண்டிருந்தனர். தலைவனை மையப் படுத்தியும் தலைவியை மையப்படுத்தியும் பல்லி நிமித்தம் சங்க இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ளன. ஆயமகளிர் பல்லியின் ஒலியை நன்னிமித்தமாகக் கொண்டு மகிழ்ந்தனர். வினைவயிற் பிரிவில் பிரிந்து சென்ற தலைவியைப் பிரிந்து துன்புறும் ஆய மகளிர் பல்லியெழுப்பிய ஒலியை நன்னிமித்தமாகக் கொண்டு தலைவன் விரைவில் திரும்பி வருவான் என நம்பினர். இதனை நற்றிணையில் வரும்,

**“முன்னியது முடித்தனம் ஆயின்,**
**நன்னுதல்!**
**வருவம் என்னும் பருவரல் தீர**
**படும்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி”**
(நற்.169:1-3)

என்ற அடிகள் பகர்கின்றன. ஆயர்கள் பல்லி ஒலிப்பதை மட்டுமின்றி அது இருந்து ஒலிக்கின்ற இடத்தையும் வைத்து நிமித்ததைக் கண்டனர். அதன் பலன் களை அறிந்தனர். பல்லியின் ஒலியை நிமித்தமாகக் கொண்ட நம்பிக்கை இக்கால மக்களிடமும் நிலவுகிறது. பல்லி தன் பசியுணர்வால் இயற்கையாக எழுப்பும் ஒலியை, நிமித்தமாக்கி ஆயர்குல மக்கள் மகிழ்ந்து வந்திருப்பதை அறிய முடிகின்றது.

### கிளிமொழி குறித்த நம்பிக்கைகள்

ஆயர்குலப் பெண்கள் தலைவன் வினை மேற்கொண்டிருக்கும் காலங்களில் பிரிவாற்றாமல், தமது துன்பத்தைப் போக்குமாறு தாம் வளர்க்கும் கிளிகள் தலைவன் வருவான் என்னும் நற்சொல் லைக் கூறவேண்டும் என விரும்புவர். அவ்வாறே அவர்கள் விரும்பியதைப் போன்றே கிளிகள் கூறினால் அதனை நன்னமித்தமாகக் கொள்வர். இதனை,

**“செந்தார்ப் பைங்கிளி முன்னை ஏந்தி**
**இன்றுவரல் உரைமோ, சென்றிசினோர்**
**திறத்தென**
**இல்லவர் அறித லஞ்சி மெல்லென**
**மழலை இன்சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை மாணலம் பெறவே”**
(அகம்.34:14-18)

என்னும் பாடலடிகளால் அறிய முடிகின்றது. கிளி, இயற்கையாகவே மனிதர்கள் சொல்லுவதைத் திரும்பச் சொல்லும் தன்மையினைக் கொண்ட தாகும். இதனை, ஆயர்குலப் பெண்கள் நிமித்தங்களாகக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்காலத்திலும் கிளி சோதிடம் பார்க்கும் வழக்கத்தைக் காணமுடிகிறது.

### முல்லை மலர்மாலை குறித்த நம்பிக்கைகள்

முல்லை மலர் மாலை குறித்த நம்பிக்கைகள் மக்களிடம் இருந்ததை,

**“சில்லைச் செவிமறைக் கொண்டவன்**
**சென்னிக்குவி முல்லைக்**
**கோட்டங் காழ் கோட்டின் எடுத்துக்**
**கொண்டாட்டிய**
**வேழை இரும்புகர் பொங்க அப்பூவந்து**
**என்**
**கூழையுள் வீழ்ந்தன்று மன்”** (கலி.107:6-9)

என்ற இப்பாடலில் ஆயர்குல இளைஞன் முல்லை மலர்களைக் கொண்டு தொடுத்த மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு ஏறு தழுவுகின்றான். அவனது கழுத்திலிருந்து முல்லை மாலை, காளைப் போரில் காளையின் கொம்பில் மாட்டிக் கொள்கின்றது. காளை துள்ளிக் குதிக்கும் போது அம்மாலை அந்தக் காளைக்குரிய ஆயமகளிரின் கூந்தலில் விழுகின்றது. அந்தக் காட்சி யைக் கண்ட தலைவியின் பெற்றோரும் உடன் பிறந்தோரும் தம் குலக்கடவுளா கிய திருமாலே நேரில் வந்து தம் குலப்பெண்ணுக்கு இவன் தான் தக்க கணவன் எனக் காட்டியதாக நம்பிக்கை கொள்ளும் செய்தியினை முல்லைக் கலியின் பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

### மகளிரின் கண் துடித்தல்

தமிழ்ச் சான்றோர்கள் சங்ககாலம் முதற் கொண்டே பெண்களின் இடக்கண் துடிப்பதை நன்மைக்கான அறிகுறி என்றும், வலக்கண் துடிப்பதை தீமைக்கான அறிகுறி என்றும் நம்பிக்கை

கொண்டுள்ளனர்.

**தாளாண்மை கூறும் பொதுவன் நமக்குஒருநாள்**
**கோளாளன் ஆகாமை இல்லை, அவற்கண்டு**
**வேளாண்மை செய்தன கண்**
*(கலி.101:44-46)*

என்னும் முல்லைக்கலிப் பாடல் வரிகளுக்கு உரையெழுதிய நச்சினார்க் கினியர் வேளாண்மை செய்தன கண் என்பதற்கு இடக்கண் துடித்தும், வலக்கண் துடியாதும் இருந்தன என விளக்கம் தந்துள்ளார். இது அக்காலப் பெண்களின் நன்மை, தீமை குறித்த நம்பிக்கையைத் தெளிவுப்படுத்துவதாகும். இந்நம்பிக்கை குறித்து சிலப்பதிகாரம்,

**"கண்ணகி கருங்கண்ணும் மாதவி செங்கண்ணும்**
**உள்நிரை கரந்து அகத்து ஒளித்து நீர் உகுத்தன**
**எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன"** *(சிலமபு. இந்திரவிழா எடுத்தகாதை:237-239)*

எனக் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. தன் மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்த கோவலன் அவளைச் சேரும் நல்லநேரம் வரப்போவதால் கண்ணகியின் இடக்கண்ணும், கருத்து வேறுப்பாட்டி னால் கோவலன் மாதவியைப் பிரியும் நேரம் வரப்போவதால் மாதவியின் வலக்கண்ணும் துடித்தன எனக் கூறுவதும் முல்லை நில மக்களின் கண் துடித்தல் நம்பிக்கையோடு ஒப்பாகிறது.

கண்துடித்தல் என்பது உடல் உறுப்புகளில் ஏற்படும் இயல்பான ஒரு அனிச்சைச் செயலாகும். இதனை அக்கால மக்கள் நிமித்தமாகக் கொண்டு இயல்பாக நடக்கும் நிகழ்வுகளின் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்துள்ளனர் என்பது புலனாகிறது. இத்தகைய கண் துடிக்கும் நம்பிக்கை இக்கால மக்களிடமும் காணப்படுகிறது.

**திங்களைப் பாம்பு கொள்ளும் என்ற நம்பிக்கை**

சந்திரகிரகணம் ஏற்படும் நிகழ்ச்சி அறிவியல் வழிப்பட்டதாகும். இதனை,

"பால்மதி சேர்ந்த அரவினைக்
கோள்விடுக்கும்" *(கலி.104:37)*

"வாள்பொரு வானத்து அரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பால்மதியும் போன்ம்"
*(கலி.105:45-46)*

என்ற பாடல்களில் முல்லை நிலத்து ஆயர் மக்கள் திங்களைப் பாம்பு கவ்வும் என மூடநம்பிக்கையாகக் கொண்டிருந்த னர் என்பதை முல்லைக்கலிப் பாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**இயற்கை வழிபாடு**

அச்சத்தின் பொருட்டு மரம், செடி கொடிகளை வணங்கி வந்த மக்கள் பின்பு இறந்த முன்னோர்களை வணங்கி வந்தனர். ஆனாலும் தாங்கள் வணங்கக் கூடிய தெய்வங்கள் மரத்திலேயே இருக்கின்றன என நம்பி வழிபட ஆரம்பித்தனர். இதற்குச் சங்கப்பாடல் கள் சான்று காட்டுகின்றன.

**"நறையொடு துகள்எழ நல்லவர் அணிநிற்பத்**
**துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்**
**முறையுளி பராஅய் பாய்ந்தனர் தொழூஉ"** *(கலி.101:12-14)*

என்ற பாடலடிகளில் நீர்த்துறையிலும் பழையஆலமரம், மாமரம் ஆகியவற்றிலும் தெய்வம் உறையும் என்பது நம்பிக்கை யாகக் கொள்ளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. தம் செயல் நிறைவேறுதற் பொருட்டு இயற்கையை வழிபடுவது பண்டைத் தமிழர் மரபினுள் ஒன்றாகத் திகழ்கிறது. இன்றும் கிராமப்புறங்களில் மரத்தின் மீது துணியைக் கட்டி வணங்கி வருவதைக் காண முடிகின்றது. குறிப்பாக வேம்பு, ஆலமரம், அரசமரம் போன்றவை வணங்கப்பட்டு வரும் மரங்களாக இருந்து வருகின்றன.

**ஏறுதம் கோலம்செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்**
**ஞாலங்கொண்டு எழூஉம் பருந்தின் வாய்வழீஇ**
**ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட**
**மாலைபோல் தூங்கும் சினை**
*(கலி.106:26-29)*

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

என்ற பாடலடிகள், காளைகளின் சீற்றத்தால் சரிந்த வீரர்களின் குடல்களை, பருந்துகள் தூக்கிச் செல்வதையும், அவ்வாறு தூக்கிக் கொண்டு செல்லப் பட்ட குடல்கள் ஆலமரத்தின் மீதும் கடம்ப மரத்தின் மீதும் விழுகின்றதையும், அவ்வாறு விழுந்த குடல்கள் அங்கு குடியிருக்கும் தெய்வங்களுக்கு அணிவிப் பதற்காக இட்டு வைத்த மாலைகள் போல மரக் கிளைகளில் தொங்கின என்ற செய்தியினையும் கூறுகின்றன. இதனால் ஆலமரமும், கடம்பமரமும் வழி பாட்டுக்குரியவை என்பது புலனாகிறது. பண்டைத் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்நதனர். என்பதை,

**உலகிற்கு ஆணி யாகப் பலர்தொழப்**
**பலவயின் நிலைஇய குன்றின்**
**கோடுதோறு**
**ஏயினை உரைஇயரோ! பெருங்கலி**
**எழிலி**
**படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு**
(நற்.139:1-4)

என்ற பாடலில் உலகை உருளாகவும், அந்த உருளிற் பொருந்தி ஆதாரமாக விளங்கும் மழையைப் பலரும் வணங்கு கின்றனர். கார்காலத்தில் திரும்பி வந்த தலைவனும் தான் பெறுகின்ற இன்பத்தை நினைத்து மழையை வணங்குகின்றான். வாழ்வு வளம் பெறுமாறு, மழையைத் தந்த மேகத்தை உலகிற்கு ஆணியாகக் கருதி வழிபடும் முல்லை நில மக்களைக் குறிப்பிடுகிறது.

**“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு**
(குறள். 18)

என்ற குறளில் மழைப் பொழிவு இல்லையெனில் இறைவனுக்கு செய்யப் படும் சிறப்புக்களும், பூசைகளும் வானத் திற்குக் கிடைக்காது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மழை தரும் வானத்தை வழிபடும் பழக்கம் முல்லை நில மக்களிடம் இருந்ததை அறிய முடிகிறது.

## முடிவுரை

தலைவியின் வருத்தத்தைப் போக்குவதற் காக முதுபெண்டிர் விரிச்சி கேட்டல் என்ற நம்பிக்கையும், பல்லியின் ஒலி, சகுனம் பார்த்தல், கண் துடித்தல், விருந்தினர் வருகையினை வெளிப் படுத்தும் காக்கை கரைதல், நீர்த்துறை, ஆலமரம், வேப்பமரம், அரசமரம் போன்ற மரங்களில் தெய்வம் உறையும் என்ற நம்பிக்கைகளும் முல்லை நில மக்களிடம் இருந்தது என்பதையும் இக்கால மக்களிடமும் இந்த நம்பிக்கை கள் இருப்பதையும் காணமுடிகின்றது.

## துணைநூற்பட்டியல்


1. இளம்பூரணர்(உரை.) “தொல்காப்பியம் சொல்லதிகாரம்”, முல்லை நிலையம், சென்னை.
2. க.காந்தி, 1980(மு.ப.), “தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்”, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. சாமிநாதையர், உ.வே.(பதி.), 1963(ஆ.ப.) “புறநானூறு மூலமும் உரையும்”, ஸ்ரீ தியாகராசவிலாசவெளியீடு,சென்னை.
4. உ.வே.சாமிநாதையர்(பதி.), 1968, “சிலப் பதிகார மூலமும் அரும்பதவுரை அடியார்க்கு நல்லொருரையும்”
5. சோமசுந்தரனார்,பொ.வே (உரை.), 1956(ம.ப.) “குறுந்தொகை”, கழக வெளியீடு, சென்னை.
6. சோமசுந்தரனார், பொ.வே.(உரை.), 1962(ம.ப) “முல்லைப்பாட்டு”, கழக வெளியீடு, சென்னை,
7. சோமசுந்தரனார், பொ.வே (உரை.), 1970(ம.ப.) “அகநானூறு”, கழக வெளியீடு, சென்னை,
8. திருஞானசம்பந்தம்(உரை.), “புறப் பொருள் வெண்பாமாலை”, கதிர்ப் பதிப்பகம், திருவையாறு.
9. நச்சினார்க்கினியார் (உரை.), 1973(முப.), “கலித்தொகை”, கழக வெளியீடு, சென்னை,
10. பரிமேலழகர்(உரை.), 1964(மறுபதிப்பு), “திருக்குறள் மூலமும் பரிமேலழகரு ரையும்”, கழக வெளியீடு, சென்னை.
11. பாலசுப்பிரமணியம்.,கு.வெ.(பதி.), 2004 (முப.), “நற்றிணை”, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.